J/Nelliady Central College O.S.A - Canada

Presents

# நெல்லை தீபம் 2017

# Gala Night

Fri 22nd Dec-2017

Scarborough Convention Centre 20 Torham PL, Toronto, ON M1X 1E3

RE/ON

**Homes Realty Inc.**
Brokerage



**Judy Gnanendran** B.Com (Hons)
Sales Representative

416-629-9797
goldenjudy@gmail.com

**Gnanendran Narasingham**
Sales Representative

416-937-8090
gnanijudy@gmail.com

www.reongtahomes.com | www.reongtacondos.com

RE/ON
Homes Realty Inc.
Brokerage

25 Karachi Dr, #15 Markham, Ontario L3S 0B5
(905) 209 8080 (905) 209 9090
www.reon.ca

## தமிழ்த்தாய் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

## கனேடிய தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!

எங்கு உள்ள நாம் ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச்சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!



# TIME FOR SOLUTIONS

## Make your house work for you!

Consolidate your high interest rate debts into your mortgage prior to renewal time for a better cash flow.

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @ 5.4% | 1,934.67 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line of Credit | 16,000 @ 6.5% | 566.67 | 0.00 |
| Line of Credit 2 | 12,500 @ 7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @ 12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @ 19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @ 24% | 150.00 | 0.00 |
| New Mortgage payment | 386,500 @ 2.8% | | 1,584.80 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,450.85** | **1,584.80** |

Based on this scenario,

**YOU CAN SAVE**

**$2,866.05**

Monthly

**BonaFide**
Mortgage Solutions Inc.
*the true freedom...*
Brokerage Lic# 10216

TD Canada Trust · Scotiabank · Street Capital · First National Financial LP · MCAP · National Bank of Canada · Merix

**Suren Nathan** AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



# பாடசாலைக்கீதம்

பல்லவி

வாழ்க வாழ்க வாழ்கவே- எங்கள்
கலைக் கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே

அனுபல்லவி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம் (வாழ்க)

சரணம்

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல் தெறித்த வீறு கொள்ளும் ஆண்மை ஓங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழும் இதய வேகமும்
விண் முகட்டிற் பாயவைக்கும் விந்தை அறிவு நிலையமாய் (வாழ்க)

இன்ப வாழ்வு பூக்கும் வண்ணம் இனிய கலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரிய பண்பு நெறிகளும்
ஆக்கி எம்மில் ஆற்றல் ஏற்றும் அறிவு நீர் வீழ்ச்சியாய் (வாழ்க)


கல்விப் பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெல்ல மெல்ல சொரிந்து நிற்கும் மேன்மை மிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சி காண அருள் வழங்கு வாணியாய் (வாழ்க)

என்பும் உரியர் பிறர்க்கு என்ற இனிய கொள்கை அழகிலே
அன்பு நெறியில் பணிகள் ஆற்றி அருமைத் தமிழின் நிழலிலே
தென்பு பெற்று தெய்வ ஒளியில் திசை கடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய் (வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வைய வாழ்வு சொர்க்கம் என்று வாகை சூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன் பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம் மூழ்கி அமரகீதம் பாடுவோம்!
அமரகீதம் பாடுவோம்! அமரகீதம் பாடுவோம்!

இராகம்: சிம்ஹானந்தப்பிரியா
தாளம்: ஏகம்

இயற்றியவர்: பண்டிதர் வீரகத்தி
மெட்டமைப்பு: சங்கீத பூஷணம் திரு. கார்த்திகேசு


WOW WINGS
OVER 123
FLAVOURS
WOW
WING HOUSE
WOWWINGHOUSE.COM
SCARBOROUGH-MARKHAM-PICKERING

# தலைவரிடமிருந்து



நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளை மிகவும் சிறப்பாக இயங்குவதுடன் கல்லூரியின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதற்கு முழுமுதற் காரணமானவர்கள் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களே. இப் பழைய மாணவர் குழாமில் நானும் ஒருவன் என்பதில் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். பலருடைய ஒத்துழைப்பாலும் உதவியாலும் மேம்பட்டு வளர்ந்தது வரும் இம் மன்றமானது மேலும் சிறப்புற வளர்ந்தது நெல்லியடி மத்திய கல்லூரிக்கு மட்டுமன்றி நமது புலத்தில் இருக்கும் ஏனைய தமிழ் பாடசாலைகளுக்கும் தன்னாலான உதவிகளை வழங்க முன்வந்திருக்கின்றது. இதற்கு நாம் மீண்டும் உங்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

எமது அமைப்பானது பதினொரு வருடங்களை வெற்றிகரமாகக் கடந்திருப்பது அங்கத்தவர்களது ஒற்றுமை, புரிந்துணர்வு என்பவற்றை மட்டுமன்றி எமது பாடசாலை, புலத்திலுள்ள ஏனைய தமிழ் மாணவர்கள் மேல் இருக்கும் பற்று தமிழினத்தின் கல்வி முன்னேற்றம் என்பவற்றில் எமக்கு இருக்கும் அக்கறையினையே எடுத்துக்காட்டுகின்றது. இவை அனைத்தும் தொடர வேண்டும். புலம் பெயர்ந்தாலும் எம் புலம் எமதேதான். எத்தனை தலைமுறைகள் சென்றாலும் இவை அனைத்தும் தொடர வேண்டும். இதற்கு மீண்டும் உங்கள் ஆதரவு தேவைப்படுகின்றது. உங்கள் பிள்ளைகள் குடும்ப அங்கத்தவர்களை எமது அமைப்பில் இணைத்து இளம் சமுதாயத்தின் முற்போக்கான சிந்தனை வளத்துடன் எமது அமைப்பினை வளர்க்க அவர்களின் தலைமைத்துவம், வழிகாட்டுகை, தொழில் நுட்பம் ஆகியவற்றை தந்து உதவ வழி செய்ய வேண்டும். உங்கள் பிள்ளைகளையும் எங்களுடன் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய யுகம் புதிய பார்வை

# MODERN FURNITURE

## தமிழர் நிர்வாகத்தில்










**3350 Pharmacy Ave #3, Scarborough**
**ON M1W 3K4 (Pharmacy and McNicoll)**

## Contact : 416-731-7044

# J/NELLIADY CENTRAL COLLEGE

- National School -

Karaveddy, Sri Lanka

Established in 1921

**Mr.G.Krishnakumar** SLPS II

Sc.Trd., B.A., P.G.D.E., M.Ed., PGDEM

T.P.No : 021-226 3017
021-226 4141
Fax : 021-226 3017

eMail: nelliadymmv@gmail.com
Facebook: www.fb.com/nelliadycentral


## வாழ்த்துரை



யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தின் நெல்லைத்தீபம் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகிறேன்.

கல்வியை முதன்மைப்படுத்தி வாழ்வியலை ஒழுங்குபடுத்தியுள்ள சமூகம் மேன்மையான பண்பாட்டைக் கொண்டதாக காணப்படும். ஈழத்தமிழ் மக்கள் புலம்பெயர் தேசங்களில் தமக்கு கல்வி வழங்கிய கல்லூரிகளை மையமாகக் கொண்டு ஒன்றிணைந்து புலத்திலும்,தாயகத்திலும் பெரும்பணி ஆற்றிவருகின்றனர். இதனால் எமது மொழியும் ,கல்வியும் ,பண்பாடும் சிறப்புற வளர்ந்து வருகின்றது. இவர்களால் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் சேவைகளாலும் உதவிகளாலும் எமது சந்ததியினரின் எதிர்காலம் ஒளிமயமானதாக உருவாகின்றது.

இவ்வகையில் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழையமாணவர்கள் கல்லூரிக்கு செய்கின்ற சேவை போற்றுதற்குரியது. தாம் வாழும் செழுமைமிகு நாடுகளின் வசதிகளை தமது உறவுகளும் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கும் தமது இனத்தின் மீதும் ,நாட்டின் மீதும் கொண்டுள்ள பற்றுதலும் இதனை வழிப்படுத்துகிறது.

எமது கல்லூரி நூற்றாண்டை அண்மிக்கின்ற இத்தருணத்திலே ஒன்றுகூடல் நடைபெறுவது மேலும் சிறப்பானதாகும். அனைவரும் ஒன்றிணைந்து கல்லூரித்தாயை நூற்றாண்டு காண அழைத்துச்செல்வோம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.

கனடா வாழ் பழைய மாணவர்சங்கத்தின் ஒன்றுகூடல் சிறப்படைய வாழ்த்துகிறேன்.

G.Krishnakumar
Principal
J/Nelliady Central College
(National School)
Karaveddy

அதிபர்

யா/நெல்லியடி மத்திய கல்லூரி

PETRO-CANADA

Raj Jeyakumar
Area Retail Licensee

416 858 6403
raj9691@hotmail.com

**Oshawa**
812 Tauton Road

**Oshawa**
925 Simcoe Street North

**Courtice**
402 King Street East

**Bowmanville**
310 Waverly Road

**Bowmanville**
2305 Hwy2

**Havelock**
52 Ottawa Street West

**Peterborough**
607 Landsdowne Street

**Whitby**
10 Tauton Road East

**Whitby**
3930 Brock Street North

**Wihtby**
1602 Durdas Street East

**Whitby**
1545 Fossland Road East

**Whitby**
301 Thickson Road

**Whitby**
520 Winchester Road East

**Whitby**
1 Paisley Court

House of Commons
Chambre des communes
Canada

Gary Anandasangaree

Member of Parliament
Scarborough—Rouge Park

December, 22nd 2017

**Greetings from Gary Anandasangaree**

**Member of Parliament for Scarborough-Rouge Park, Toronto, Canada**

It is my distinct pleasure to extend my warmest greetings to those of you in attendance at tonight's *2017 Nelli Theepam Gala.*

The members of J/Nelliady Central College O.S.A- Canada are renowned for their commitment to education, unwavering generosity, and steadfast support of marginalized youth in Sri Lanka. For the past eleven years, N.C.C. has taken significant action to remove barriers to education in disadvantaged communities through the provision of school buildings, essential classroom supplies and specialized education experts. These ongoing initiatives not only enhance local capacity development, but provide long-term solutions which have helped increase student success inside and outside the classroom.

I would like to congratulate the members of J/Nelliady Central College O.S.A- Canada on your incredible contributions to global education and youth development. I look forward to the continued success of the N.C.C. for many years to come!

Yours very truly,

Gary Anandasangaree
*Member of Parliament*
*Scarborough-Rouge Park*

CANADA 150

Ottawa

Room 1110, The Valour Building, Ottawa, Ontario K1A 0A6
Tel.: 613-992-1351 Fax.: 613-992-1373
Gary.Anand@parl.gc.ca

Constituency Office

3600 Ellesmere Road -Unit 3, Scarborough, Ontario, M1C 4Y8
Tel.: 416 -283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca

# தண்ணீர் தண்ணீர்

பெண்களே மிகவும் அவதானமாக இருங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையினால் அவதிப்படப் போகின்றீர்கள். நாடும் வீடும் செழிப்பற்றுப் போவதற்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஒரு முக்கிய காரணி. தண்ணீர்ப் பற்றாக்குறை எவ்வாறு ஒரு முக்கிய காரணி என்பதனையிட்டு எந்தத் திசையிலிருந்தும் கேள்வி வராது என்பது தெட்டத் தெளிவான விடயம். ஆனாலும் ஏன் பெண்கள் அவதிப்படவேண்டும் ஆண்களும் சேர்ந்து தானே அவதிப் படவேண்டும் என்றொரு அபிப்பிராயம் அனைவரிடமும் இருக்கும். இருந்தபோதிலும் தண்ணீர்ப் பற்றாக் குறையினால் அதிகம் அவதிப்படப் போவது பெண்கள் தான் எனச் சொல்கின்றது ஒரு ஆய்வு.

பின் தங்கிய கிராமங்களில் அது எந்த நாடாயினும் சரி தண்ணீருக்காக சண்டை போடுபவர்களும் தண்ணீர் எடுக்கும் இடங்களில் சண்டை போடுபவர்களும் கூட பெண்களாகிய நாம் தான். தண்ணீர் தட்டுப்பாடான இடங்களில் குழாயடிச் சண்டையும் கிணற்றடிச் சண்டையும் இப்படி எத்தனையோ சண்டைகளுடன் மாத்திரம் நின்றுவிடாது இரண்டு நாட்டினை தண்ணீர் பிரிக்கும் போது அவ்விரண்டு நாடுகளுக்கிடையில் கூட சண்டை ஏற்பட்டு விடுகின்றது. மனிதன் வாழும்வரை தண்ணீர்ப் பிரச்சனை இருந்து கொண்டே வரப் போகின்றது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பூமியின் 70 வீதம் நீராக இருந்த போதிலும் அதில் மூன்று வீதமே சுத்தமான நீராக நாம் அருந்தக் கூடியதாக இருக்கின்றது. கிட்டத்தட்ட உலக சனத்தொகையில் ஆறு பேருக்கு ஒருவர் என்னும் விகிதத்தில் சுத்தமான நீர் கிடைப்பதில்லை எனவும், வளர்முக நாடுகளில் 2.2 மில்லியன் மக்கள் சுத்தமான நீர் கிடைக்காததால் இறப்பதாயும் மருத்துவமனைக் கட்டில்கள் அரைவாசியும் தண்ணீர் சம்பந்தமான நோயுடையவர்களினால் நிரம்பியுள்ளதாயும் கணிப்பீடு ஒன்று கூறுகின்றது. இதைவிட உலகில் சுத்தமான நீர் கிடையாமல் இறக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 6000 எனக் குறிப்பிடப் படுகின்றது. பெருகிவரும் சனத்தொகையும் அருகி வரும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும் கூட இந்த நீர்ப்பிரச்சனையினை அதிகரிக்கச் செய்கின்றது. சுற்றுச் சூழலியல் ஆய்வாளர்கள் இதனை உலகின் நீருக்கான போர் என அழைக்கின்றனர். இவ்வாறான பிரச்சனைகளால் உலகில் தண்ணீர் அகதிகள் அதிகரிக்கப் போகின்றார்கள். கிட்டத்தட்ட 2050 ஆம் ஆண்டளவில் மிகப் பெரிய தண்ணீர் தட்டுப்பாட்டினை உலகம் எதிர்நோக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இவ்வாறு அருகிவரும் இந் நீர்ப்பிரச்சனை உலகில் சமாதானமின்மையினை அல்லது நாடுகளுக்கிடையில் போரினை ஊக்குவிக்க அல்லது ஆரம்பித்து வைப்பதற்கு ஏதுவாக அமையப் போகின்றது என்னும் ஓர் பயம் தற்போது ஆரம்பித்துள்ளது.

உலகிலுள்ள தண்ணீர் பற்றிய விபரங்கள் ஐக்கிய நாடுகள் சபையினால் கண்காணிக்கப் பட்டு ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒரு தடவை அது பற்றிய ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இதனடிப்படையில் எதிர்நோக்கப்படும் தண்ணீர்த் தட்டுப்பாடும் அதனைப் பேணுவதற்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் புரியத் தொடங்கியிருக்கின்றது. மேலும் அனைத்து மக்களும் தூய குடிநீரும் சுகாதார வசதியும் பெறவேண்டும் என்றும் அது அவர்களது உரிமை எனவும் ஐக்கிய நாடுகள் மன்றம் ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றி இருந்தது. தூய குடிநீர் பெறுவது ஒரு மனிதனது அடிப்படை உரிமை எனவும் அனைத்து நாட்டு அரசும் அரசியலும் இதற்கு இவ் அடிப்படை உரிமையினைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. (இதற்கு இலங்கை அரசு விதிவிலக்கு எனக் குறிப்பிடப் பட்டுள்ளதோ என்னவோ தெரியவில்லை. வன்னி மக்களுக்கு நீர் கூட அவர்களது பொதுவுடமை இல்லாது பண்ணி விட்டது. வங்கிக் கடன் அட்டைகள் தரும்போது மிக மிக சிறிய எழுத்துக்களில் சில விடயங்கள் எழுதப் படுவது போல இதுவும் இலங்கை அரசிற்கு சார்பாக நுண்ணிய எழுத்துக்களில் ஏதாவது விதிவிலக்கு வாசகங்கள் உண்டோ தெரியவில்லை. தெரிந்தால் சொல்லுங்கள்.

ஐநாவின் கணக்கீட்டின்படி, உலகில் ஏறத்தாழ 200 கோடி மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர். உலகின் 88 கோடியே 40 இலட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லை. 260 கோடி மக்களுக்குக் கழிப்பறை வசதி இல்லை. உலகின் வளரும் நாடுகளிலுள்ள ஏறத்தாழ 40 % மக்களுக்கு முற்றாக இத்தகைய வசதிகள் இல்லை. ஐ.நா. மதிப்பீட்டின்படி, 2025-ஆம் ஆண்டுக்குள் உலகில் 48 நாடுகள் குடிநீர் பற்றாக்குறையால் தவிக்க நேரிடும். ஏற்கெனவே ஆயிரக்கணக்கான கிராமங்கள் நீரின்றி மக்கள் வெளியேறுவது பல ஆப்பிரிக்க நாடுகளிலும், ஈரான், சீனா மற்றும் பாகிஸ்தானிலும் நிகழ்ந்து வருகிறது. நாட்டில் போர் காரணமாக இருக்க முடியாது நாங்கள் தாய்மண்ணை விடுத்து இடம் பெயர்ந்து அரசியல் அகதிகளானது போல இம் மக்கள் தண்ணீர் அகதிகளாக தமது தாய்மண்ணை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிவியாவின் கோச்சம்பா நகரில் அந்த நாட்டு மக்களால் 1999ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தண்ணீர் தனியார் மயமாக்கலுக்கு எதிரான கிளர்ச்சி கிட்டத்தட்ட 2005ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்தது. இந்தக் கிளர்ச்சியினை வழிநடாத்தியவர் சோசலிசத்துக்கான இயக்கத்தின் தலைவரான

**Husky**

## Kannan Thiraviam

MSO Retailer (Vaghan Cluster)

647 219 3275

**Concord**
3191 Rutherford Road

**Vaughan**
2757 Hwy7

**Concord**
600 North Rivermade Road

**Maple**
9332 Keele Street

**Vaughan**
2200 Steeles Ave West

**Bolton**
12476 Regional Road 50

**Vaughan**
681 Chrislea Road

**Alliston**
514 Victoria Street East

**Thornhill**
7377 Yonge St

**Midhurst**
1013 Bayfield Road North

**Newmarket**
18080 Yonge St

மெரோலஸ். இவர் வழிநடாத்தி முன்னெடுக்கப்பட்ட இத் தீர்மானத்திற்கு சக அங்கத்துவ நாடுகள் எதிராக வாக்களித்தன. இதில் உலக ஏகாதிபத்திய நாடுகளும் பணபலம் மிக்க நாடுகளுமான அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான், கனடா போன்ற நாடுகள் அடங்குகின்றன. இதற்கிடையில் தண்ணீரை ஏற்றுமதி செய்து இலாபம் பெறும் பெரும் நிறுவனங்கள் தண்ணீரை தனியார் மயமாக்குவதற்கு ஆதரவாக பலநடவடிக்கைகளை எடுக்கின்றன.

இவ்வாறு எதிர்கொள்ளப் போகும் தண்ணீர் தட்டுப்பாடு ஒருபுறம் இருக்க தண்ணீர் கிடையாது நிகழ் காலத்திலேயே பல நாடுகளில் பல மக்கள் 'அவதியுறுகின்றனர். இப்படிப்பட்ட தண்ணீர் கிடைத்த போதிலும் எம்மில் பலர் அதனைச் சரியாகப் பாவனைப் படுத்துவதில்லை. சிலர் பாத்திரம் கழுவும் போது தண்ணீர் குழாயினை நிறுத்தாது பாத்திரத்திற்கு சவர்க்காரம் போடுவார்கள். இதனால் இவர்கள் தண்ணீரை மட்டும் வீணாக்குவதில்லை தண்ணீருக்காக நாம் செலவழிக்கும் பணத்தினையும் அதிகரிக்கச் செய்கிறார்கள்.

மேலும் வீடு வைத்திருப்போர் புல்லுக்குத் தண்ணீர் விடும்போது அளவுக்கு அதிகமாக விடுவார்கள். இவ்வாறு பலவிதமாக தண்ணீரை நாம் வீணாக்குகின்றோம். ஆகவே நாம் வீட்டில் சேகரிக்கத் தொடங்கினால் முற்று முழுதாக எதையும் செய்யமுடியாவிடினும் ஓரளவாவது செய்யலாம். அனைத்து மக்களும் இதனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

நீர்த்தட்டுப்பாடு என்னும் பிரச்சனையினால் கிருமிகள் நிறைந்த தூய்மையற்ற நீரை அருந்தி இறக்கும் மக்கள் பலர் இருக்கிறார்கள். எத்தனை ஆயிரம் குழந்தைகள் ஒருநாளில் மரணத்தினைத் தழுவிக் கொள்கின்றார்கள். இவ்வாறெல்லாம் இருக்கும் போது இந்த நீரை நாம் வீணாக்கி விடலாமா? சிறுதுளி தானே பெருவெள்ளம்.?

சிவாஜினி பாலராஜன்




Pre-Owned Luxury & Compact Vehicle Sales
Also We Offer
* HID/ LED Lights
* Automotive Parts
* Wheels & Tires
Contact Suren
Sales@LevelUpMotors.ca
(647) 886 - 2886
LevelUpMotors
Vaughan, ON
www.LevelUpMotors.ca
LEVELUP
MOTORS
191 CALDARI RD., UNIT 4
VAUGHAN, ON
L4K 4A1
TEL: (647) 886-AUTO


வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..
கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்
அடமான (Mortgage)
ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்
கமல் நவரட்ணம்
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-671-4815
E mail:kamalhomesale@gmail.com
HomeLife/Future Realty Inc.
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated
Trusted and reliable services

# எமக்கான புதிய சினிமா பாதையை உருவாக்குவோம் நம்பிக்கை தரும் குறுந்திரைப்பட வளர்ச்சி

**கனடாவில் தயாரான சில குறும்படங்கள் சர்வதேச அளவில் பேசப்பட்டன ஆனாலும் வர்த்தகரீதியாக சாதிக்க இல்லை என்றுதான் கூறவேண்டும் . எமக்கான சினிமா மொழி நடை பேசப்படவேண்டும் .இதற்காண நிறையவாய்ப்புகழ் கனடாவில் உள்ளன. எமக்கான புதிய சினிமா பாதையை உருவாக்குவோம்**

உலகின் தமிழ் சினிமாத்துறை வரலாற்றில் இலங்கைக்கும் ஒரு தனிஇடம் உண்டுஎன்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் உலகம் எமது கைக்குள் அடங்கி விட்ட நிலையில் எவருக்குமே எதற்குமே நேரம் இருப்பதில்லை. இவ்வாறான அவசர உலகின் அவிழ்த்து விடப்பட்ட தொழில்நுட்பக் கைதியாக மனிதன் மாறி விட்டான்.




மூன்று மணித்தியால திரைப்படம் கூட 30 நிமிடம் அல்லது 3 நிமிடத்திற்குச் சுருங்கி விட்டது. அந்த நிலையில்தான் குறுந்திரைப்படங்கள் உருவாகியிருக்கின்றன. நாற்பது நிமிடம் அல்லது அதற்குக் குறைந்த காலஅளவைக் கொண்ட ஓர் அசையும் படமே குறுந்திரைப்படம் எனப்படுகிறது.

இலங்கையில் தற்போதைய இளம் கலைஞர்களால் அதிகம் உருவாக்கப்பட்டு சாதனைக் கனிகளையும் எட்டும் அளவிற்கு வளர்ந்து நிற்கின்றன இந்த குறுந்திரைப்படங்கள்.

தமிழ் பேசும் இளைஞர்கள் திறமையானவர்கள், தீர்க்கஅறிவு உடையவர்கள் என்பதற்கு தற்கால குறுந்திரைப்படங்கள் தக்கசான்றாக விளங்குகின்றன. இருப்பினும் தமிழ் பேசும் சமூகம் சிறுபான்மையாக வாழ்ந்து வருகின்ற இந்த நாட்டில் எமது இளைஞர்களின் படைப்புகள் எந்த இடத்தை வகிக்கின்றன என்ற கேள்விக்குப் பதில் கேள்விக்குறிதான்.

எவரும் உழைத்தால் உயரலாம் என்பதற்கு உதாரணம் சினிமாதான் என்ற நா. முத்துக்குமாரின் வரிகளுக்கு இலங்கை தமிழ் சினிமாத்துறை, குறிப்பாக குறும்படத்துறையில் அர்த்தம் இருக்குமா என்பது சந்தேகம்தான். இதற்குஅரசியலும் முக்கிய காரணமாக அமையலாம்.

2002 ஆம் ஆண்டு 'ஸ்க்றிப்ட் நெட்' இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், பெரும்பான்மையினரின் திரைப்படத் துறைக்கு நிகரான தமிழ்த் திரைப்படத் துறையை, தமிழர் சூழலில் உருவாக்குவதற்காக ஆகும். அதன் முதற் கட்டமாக குறுந்திரைப்பட படைப்பாக்கத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஒரேநாளில் குறுந்திரைப்படம் உருவாக்க முடியும் என்ற அளவுக்கு தமிழ் பேசும் இளைஞர்களின் திறமை வளர்ந்திருக்கிறது.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்ச் சர்வதேச குறுந்திரைப்பட போட்டியில் ஸ்க்றிப்ட் நெட்டினால் தயாரிக்கப்பட்ட 'அழுத்தம்' திரைப்படம் 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த (முதலாவது) திரைப்படத்துக்கான விருதைப் பெற்றமை முக்கிய வரலாற்றுச் சம்பவமாகும். அதுபோன்று 2013 டிசெம்பர், 04 ஆம் திகதி மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட சிங்கள– தமிழ் குறுந்திரைப்படப் போட்டியில் அப்பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'கொலையாளி யார்?' எனும் குறுந்திரைப்படம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் ஒருவரலாற்றுப் பதிவாகும்.

இருப்பினும் போர்ச் சூலுக்கு முன்னர் இலங்கையின் தமிழ் சினிமா வளர்ச்சி கண்டஅளவுக்கு தற்காலத்தில்


PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
PROPERTIES SOLD AT THEIR BEST!
6888 14th Ave
Markham, On L6B 1A8
Office: 416-291-3000
NEW HOMES/RESALE
NEW CONDOS/RESALE
LAND, FARM & INVESTMENTS
PROFESSIONAL PHOTO & VIRTUAL TOUR
HOME STAGING
NEW MORTGAGE
Residential/Commercial/Renewal
FOR ALL YOUR REAL ESTATE AND MORTGAGE NEEDS!
List With Us! Guaranteed Sold in 15 Days!
If Not No Listing Commission!
Keith Sanmugathas
Sales Representative
keith.propertymax@gmail.com
Sun Sanmugathas
sun.promax@gmail.com
Broker of Record
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

இல்லாத போதிலும், எமது தமிழ்க் கலைஞர்களின் குறுந்திரைப்படங்கள் தேசிய ரீதியில் விருதுகளைப் பெறும் அளவிற்கு வளர்ச்சி கண்டுதான் இருக்கின்றன.

சிங்கள குறும்படங்களோடு ஒப்பிட்டு நோக்குமளவிற்கு எமது தமிழ்ப் படங்கள் வளராமைக்கு சில பல காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எமது இயக்குனர்கள் எப்பொழுதுமே இந்திய சினிமாத்துறையை தழுவியே படங்களைத் தயாரிப்பதும் யுத்தம், இனப்பிரச்சினை போன்ற வட்டத்திற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பதும் முக்கிய காரணங்கள் எனலாம். மேலும் தைரியமாக முன்னின்று அனுசரணை வழங்குவதற்கு பெரிய மனிதர்கள் யாரும் தயாரில்லை என்பதும் வேதனைக்குரிய விடயம்.

எப்படிப்பட்ட தடைகள் வந்தாலும் கூட பனைமரக்காடு, கோமாளி கிங்ஸ் போன்ற படைப்புக்கள் ( திரைப்படங்கள்) வெளிவந்து நாங்களும் திறமையானவர்கள் என்று இலங்கைத் தமிழ் கலைஞர்களையும் புலம்பெயர் தமிழசினிமா கலைஞர்களையும் சர்வதேசம் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு எமது இலங்கைத் தமிழ் சினிமா வளரத்தான் செய்கிறது.

ஆகவே இலங்கைத் தமிழர்களின் சினிமாஆர்வம், எதிர்பார்ப்பு, இரசனை என்பன தென்னிந்தியாவை மாத்திரமே நாடி நிற்காமல் எமதுநாட்டின் சொந்த மண்ணின் படைப்புக்களையும் சற்றுக் கவனித்தால், ஆதரவு வழங்கினால் எமது கலைஞர்களும், படைப்புக்களும் சர்வதேச அங்கீகாரம் பெறும் என்பது உறுதி

**ஊடகவியாளர்**
**நாதன்வீரவாகு**

**நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**வருமானச் செலவுக் கணக்கு**

**15.10.2016 தொடக்கம் 22.12.1017 வரை**

| வருமானம் | $ | $ | செலவீனம் | $ | $ |
|---|---|---|---|---|---|
| வங்கி இருப்பு | 7343.00 | | இயல், இசை, நாடக விழா 2016 | 5458.00 | |
| முற்பணம் திரும்பியது | 1986.00 | 9329.00 | பொதுக்கூட்டம், நிர்வாக சபை - 2016 | 592.00 | |
| | | | மதிப்பளித்தல் இரவு - 2017 | 6915.00 | |
| **இயல், இசை, நாடகம்** | | | நிர்வாகசபைக் கூட்டம் - 2017 | 190.00 | |
| **கலை விழா- 2016** | | | நெல்லியடிம.கல்லூரி யன்னல் திரை | 2010.00 | |
| அனுமதிச்சீட்டு வருமானம் | 1860.00 | | கோடை கால ஒன்றுகூடல் - 2017 | 1584.00 | |
| புத்தக விளம்பரம் | 5050.00 | | கண்ணீர் அஞ்சலி , மலர் வளையம் | 435.00 | |
| நன்கொடை | 1100.00 | 8010.00 | விளம்பரம், தமிழர் வழிகாட்டி | 160.00 | |
| | | | யாப்பு மொழியாக்கம் | 100.00 | |
| அங்கத்துவப் பணம் | | 100.00 | முற்பணம் T-Shirt | 95.00 | |
| | | | விளம்பர வருமதி G.P | 150.00 | |
| **கோடை கால ஒன்றுகூடல் - 2017** | | | வாங்கி கூலி | 75.00 | 17764 |
| அனுமதிச்சீட்டு விற்பனை | 1044.00 | | | | |
| அதிஷ்டப்பரிசு விளம்பரம், வர்ணா, ஜானி, புஷ்பலதா | 285.00 | 1329 | | | |
| | | | வங்கி இருப்பு 22.12.17 | 8566.00 | |
| | | | செல்மதி | (647.00) | 7919.00 |
| **மதிப்பளித்தல் இரவு - 2017** | | | | | |
| நிர்வாகசபை அங்கத்தவர்கள் | | 6915.00 | | | |
| | | 25683.00 | | | 25683.00 |


SERVING
MORE THAN
25 YEARS
Looking for Staffing agency?
GPLUS Staffing Services Inc.
The Professional Service
Without professional cost.
Comply With All the Provincial
and Federal Rules & Regulations.
Will Take Care of All Payrol, WSIB, CPP, EI,
WSIB Claim, and Serverance Pay.
THE SERVICE
YOU CAN TRUST
T 416 477 2190
F 416-477-2177
E info@gplusstaffingservices.com
W gplusstaffingservices.com


J/NELLIADY CENTRAL COLLEGE-NATIONAL SCHOOL


யா/நெல்லியடி மத்திய கல்லூரி - தேசிய பாடசாலை
J/NELLIADY CENTRAL COLLEGE - NATIONAL SCHOOL
KEY
WARNING
CCTV















Buy/Sale/Lease
Res/Com/Indu
Properties?
MohanTeam.Com
PROPERTY MAX
Realty Inc. Brokerage
THE PULSE OF PROPERTIES
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள் !
Mohan Subramaniyam
Broker
416-321-2300




திருமணமா. பிறந்ததினமா. கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா. வேறு வைபவங்க கையாக செய்திடுவோம்.
அறுசுவை உணவை ராஜரீதியில் பணிவுடன் படைத்திடுவோம்
ராஜாராம்
உணவுச்சேவை
Rajah Ram
Caterer
தரமான பாகம்
தவறாத நேரம்
தரமே நிரந்தரம்
www.rajahram.com
Tel: 416-299-5200 Fax: 416-299-5795

I am so proud to see the way the Nelliady Central College OSA has grown and flourished over the years. The school is almost a century old, and I hope that the NCC OSA that we build together is just as long lasting. It is my hope that we can pass on the values we have learned to the next generation, so they can continue the work we have done. I would also like to sincerely thank the executive members for all their hard work, and the dedication they have shown.



**N. Gnanendran,**
Secretary

# வாஷிங்டனிலிருந்து குறிஞ்சி மலரை தேடும் யாழ்ப்பாணத்து மங்கை

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனிலிருந்து வந்த ஒரு செல்பேசி அழைப்பு குறிஞ்சி மலரைப் பற்றியதாக இருந்தது. அழைத்தவர் யாழ்ப்பாணத்தின் இளவாழையில் பிறந்தவரான தங்கை புஷ்பராணி. இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்ட குறிஞ்சி மலர், தமிழ்நாட்டில் எங்கு இருக்கிறது என்பதுதான் அவரது தேடல்.

மூணாறு, இடுக்கி போன்ற மலைச் சரிவுகளில் குறிஞ்சி மலர்கள் பற்றிய கேரள அரசு வெளியிட்ட விபரங்கள் மட்டும் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. தமிழக அரசின் இணையதளங்களிலும், சுற்றுலாத் தளங்களிலும் குறிஞ்சி மலர் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்று அவருக்குக் கோபம். உண்மைதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மலர் என்பதைத் தவிர, நமக்கு குறிஞ்சி மலர் பற்றி என்ன தெரியும்?

உலகின் மூத்த மொழிகள் பலவற்றின் இலக்கியங்களை விடக் கூடுதல் அழகியல் விவரிப்புகளைத் தமிழ் பெற்றிருப்பதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பல நூற்றாண்டுகளாக உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐரோப்பியத் தொல் இலக்கியங்கள் சிறப்புக்குரியவைதான் என்றாலும், தமிழ் இலக்கியங்களைப் போல அழகியல் நுட்பத்தை அவை பெற முடியவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம், தமிழ் நிலத்தின் மலர்கள்தான் என்று சொல்லலாம். கூர்ந்து கவனித்தால் நறுமணம் பொருந்திய மலர்களின் வனமாகத்தான் சங்க கால இயற்கைச் சித்தரிப்புகளில் பல அமைந்துள்ளன.

ஐரோப்பிய மொழி இலக்கியங்கள் பலவற்றைக் கற்றறிந்தவரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளுக்கு அடித்தளம் அமைத்தவருமான தனிநாயகம் அடிகளின் ஆய்வு மதிப்பீடுகள் நம்மை வேறு ஒன்றைச் சிந்திக்க வைக்கின்றன. பனி போர்த்திய மேற்கத்திய நாடுகளின் மொழிகளின் செவ்விலக்கியங்கள், ஒரே வெண்மையாகத்தான் தெரிகின்றன. ஆதிz

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனிலிருந்து வந்த ஒரு செல்பேசி அழைப்பு குறிஞ்சி மலரைப் பற்றியதாக இருந்தது. அழைத்தவர் யாழ்ப்பாணத்தின் இளவாழையில் பிறந்தவரான தங்கை புஷ்பராணி. இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்ட குறிஞ்சி மலர், தமிழ்நாட்டில் எங்கு இருக்கிறது என்பதுதான் அவரது தேடல்.

மூணாறு, இடுக்கி போன்ற மலைச் சரிவுகளில் குறிஞ்சி மலர்கள் பற்றிய கேரள அரசு வெளியிட்ட விபரங்கள் மட்டும் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. தமிழக அரசின் இணையதளங்களிலும், சுற்றுலாத் தளங்களிலும் குறிஞ்சி மலர் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்று அவருக்குக் கோபம். உண்மைதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் மலர் என்பதைத் தவிர, நமக்கு குறிஞ்சி மலர் பற்றி என்ன தெரியும்?

உலகின் மூத்த மொழிகள் பலவற்றின் இலக்கியங்களை விடக் கூடுதல் அழகியல் விவரிப்புகளைத் தமிழ் பெற்றிருப்பதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பல நூற்றாண்டுகளாக உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐரோப்பியத் தொல் இலக்கியங்கள் சிறப்புக்குரியவைதான் என்றாலும், தமிழ் இலக்கியங்களைப் போல அழகியல் நுட்பத்தை அவை பெற முடியவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம், தமிழ் நிலத்தின் மலர்கள்தான் என்று சொல்லலாம். கூர்ந்து கவனித்தால் நறுமணம் பொருந்திய மலர்களின் வனமாகத்தான் சங்க கால இயற்கைச் சித்தரிப்புகளில் பல அமைந்துள்ளன.

ஐரோப்பிய மொழி இலக்கியங்கள் பலவற்றைக் கற்றறிந்தவரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளுக்கு அடித்தளம் அமைத்தவருமான தனிநாயகம் அடிகளின் ஆய்வு மதிப்பீடுகள் நம்மை வேறு ஒன்றைச் சிந்திக்க வைக்கின்றன. பனி போர்த்திய மேற்கத்திய நாடுகளின் மொழிகளின் செவ்விலக்கியங்கள், ஒரே வெண்மையாகத்தான் தெரிகின்றன. ஆதி காலத்தில் பல வண்ணங்களின் நெருக்கம் ஐரோப்பியர்களுக்கு இல்லை. வண்ணங்கள்தான் மனிதருக்குள் அழகியல் நுட்பத்தை வளர்த்தெடுக்கின்றன.

தமிழ் மக்களின் புவிசார் வாழ்க்கை அலாதியானது. மிதமான வெப்பத்தையும் மிதமான குளிரையும் பெற்றுள்ள இந்த நிலப் பகுதியின் மலர்கள் பல நிறங்களில் பிறப்பெடுத்தவை. தமிழ் மொழியின் செழுமை மிக்க அழகியலும் இந்த வண்ணங்களிலிருந்தும், மலர்களிலிருந்தும் தோன்றியவை. இந்த மலர்களில் முதன்மையானது என்று குறிஞ்சிப் பூவைப் பற்றி பண்டைய தமிழகம் பெருமை கொண்டுள்ளது.

கபிலரின் 'குறிஞ்சிப் பாட்டு' பிறந்து கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. இதில் குறிஞ்சிப் பூக்கள் உட்பட 99 பூக்களின் பட்டியல் விவரங்களுடன் தரப்பட்டுள்ளன. மலர் தலை உலகு, என்று பூமியைப் பார்த்த தமிழர்கள், ஐந்து வகை நிலங்களை வகுத்தெடுத்து அதற்குத் திணை என்று பெயரிட்டார்கள். திணை ஒவ்வொன்றுக்கும் ஒரு மலரையும் அறிவித்துக் கொண்டார்கள். இதைப் போலவே திணை ஒவ்வொன்றுக்கும் வாழும் நெறி அல்லது திணை ஒழுக்கம் ஒன்றையும் வகுத்துக் கொண்டார்கள்.

குறிஞ்சி மலரின் சிறப்பு அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கிறது என்பதில்தான் அடங்கியிருக்கிறது. அதன்படி தமிழ்நாடு நீலகிரி மலையில் குறிஞ்சி மலர்கள், 2018 இ-ல் பூக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் குறிஞ்சிப் பூக்கள் பூக்கின்றனவா என்ற சந்தேகத்தைப் பலரும் எழுப்புகிறார்கள்.

இது பற்றிய விளக்கங்களை நீலகிரி மாவட்டம் ஊட்டியைச் சேர்ந்த குறிஞ்சி மலர் ஆர்வலர் மதிமாறன் சில முக்கிய தகவல்களைத் தெரிவித்தார். ஓராண்டுக்கு ஒரு முறை, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆறாண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி வகைகளும் உண்டு என்கிறார் அவர்.

ஆனால், இத்தனை சிறப்பு மிக்க குறிஞ்சி பூக்கும் இயற்கை சூழலைப் பாதுகாக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை. தமிழ் மக்களின் ஆதிப் பண்பாட்டின் அடையாளமாகவும் பெருமையாகவும் கருதப்படும் குறிஞ்சி மலர்களை அழிய விடாமல் பாதுகாப்பதும், அதைக் கொண்டாடுவதும் நம் கடமை. நீலகிரியில் கோடை விழாக்கள் நடத்துவதைப் போல குறிஞ்சி மலர் விழாக்களை நடத்துவதும், குறிஞ்சி மலர் பற்றிய தொல் நினைவுகளை உணர்த்தும் வகையில் அருங்காட்சியகம் ஒன்று அமைப்பதும் காலத்தின் தேவை!

கனக . இளந்திரன்

*Best wishes from*

# Dr. Santhakumar & Associates

Centre City Medical Clinic - குடும்ப வைத்திய நிலையம்

## KEY TO ALL YOUR MEDICAL NEEDS

### IN MISSISSAUGA & BRAMPTON

Dr. V. Santhakumar (MBBS, CCFP) Family Physician
DR.V. சாந்தகுமார் - குடும்ப வைத்தியர்
Dr.C. Mahendira (MBBS, CCFP) Family Physician
DR.C.மகேந்திரா - குடும்ப வைத்தியர்
Dr. Sivaraji Vakeesan (MBBS, CCFP) Family Physician
DR.சிவாராஜி வாகீசன் - குடும்ப வைத்தியர்

### Centre City Physiotherapy and Rehabilitation Clinic

Chiropractic, Massage Theraphy Servicest

Sumathy Santhakumar BSc (PT) Physiotherapist
சுமதி சாந்தகுமார்
Amal Siva (DC) Chiropracter
அமல் சிவா

தமிழ் பேசும் வைத்திய நிபுணர்களின் சேவைகள்

**Eye Exam Available By Optometrist** - கண் வைத்திய சேவை
**Diabetic Education**

**Pharmacy Next Door with services in Tamil** மருந்தகம் தமிழில் சேவைகள்

குழந்தைகள், தாய்மார்கள், மற்றும் முதியோர் வைத்தியம், உடல், உள நல பராமரிப்பு

Near Hwy10, Kennedy / Matheson Area




**OPEN**
***MONDAY TO SATURDAY***
*BY APPOINTMENT ONLY*

CENTRE CITY MEDICAL CLINIC
5560 McAdam Road
Mississauga ON L4Z 1P1
905.273.6895
905.273.7946 (Physio)

# மூளை எனும் குப்பைமேடு

நாம் வசிக்கும் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ நாம் கண்டபடி குப்பைகளை போடுவதில்லை. தேவையில்லாத பொருட்களை வாங்கி வீடு முழுவதும் அடுக்குவதில்லை. அப்படிச் செய்பவர்களின் வீட்டில் ஒரு அடி கூட நடப்பதற்கு வழி இருக்காது. தேவையோ தேவை இல்லையோ கண்ட பொருட்களையும் வாங்கி அடுக்குவதில் பலபேர் கெட்டிக்காரர்கள். இவர்கள் வீட்டில் எந்த பொருளும் தேடாமல் கிடைக்காது. ஆனால் இதே நிலைமையை நமது மனதில் அல்லது மூளையில் யோசித்துப்பாருங்கள். நமது மூளை சில விஷயங்களை கிரகிக்கவும் சில விஷயங்களை ஆராய்வதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மூளைக்குள் நாம் பதிவிடும் விஷயங்கள் அதன் செயல் திறனை சரியான வழியில் பயன்பட உதவுகின்றன. சரியான விஷயங்களை உள் வாங்கும்போது மூளை சரியாக செயல்படுகிறது. ஆனால் குப்பைகளை மூளையில் கொட்டும்போது மூளை களைப்படைகிறது.

மூளைக்கு குப்பைகள் எவ்வாறு போகின்றன? நம்மை அறியாமலே நாம் குப்பைகளை கொட்டிக் கொண்டிருக்கிறோம். ஆமாம். ஒரு நிமிடம் யோசித்துப்பாருங்கள். இந்த விஞ்ஞான யுகத்தில், இணையம் பரந்து விரிந்த உலகத்தினை நம் கைகளுக்குள் அடக்கி விட்ட தருணத்தில், நம்மால் அரை நொடி சும்மா இருக்க முடிகின்றதா ?

வங்கியில் காசு எடுப்பதற்கு வரிசையில் நிற்கின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நமக்கு முன்னே மூவர் நிற்கிறார்கள். இன்னும் ஐந்து நிமிடத்தில் நாம் காசாளரை சந்தித்து விடுவோம். அதற்குள்ளாக கை பேசியை எடுத்து அதில் வந்துள்ள செய்திகளை ஒரு பார்வை பார்க்கிறோம். ஒரு காலத்தில் பஸ்ஸிலோ ரயிலிலோ பயணம் செய்யும்போது பல மனிதர்களை பார்ப்போம் பல சுவையான சம்பாஷணைகள் நடக்கும் என் பல நட்புகள் கூட உருவாகும். ஆனால் இன்று நமது கை பேசி தான் நண்பன்.

அந்நாளில் சிலபேருக்கு காலையில் காபி குடித்தால் தான் காலை கடன் செய்ய வரும். இன்றோ காலையில் எழுந்து வாட்சாப் பார்த்தால்தான் அந்த நாளே விடியும். காலையில் ஆரம்பித்து நம்மோடு ஒட்டிக்கொள்ளும் இந்த கை பேசி இரவு படுக்கும் வரை நம்முடனேயே பயணிக்கிறது. நமது குடும்பம் மற்றும் நண்பர்களுடன் அளவளாவுவதை விட இணைய உலகில் சஞ்சரிப்பது இன்று பல மடங்கு அதிகரித்துவிட்டது. நிஜ உலகில் வாழ்வதை விட்டு ஒரு மாய உலகில் நாம் பெரும்பாலும் வாழ பழகிவிடுகிறோம். மதுவிற்கு அடிமையானவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் போதை உலகில் வாழ்ந்து வருவார்கள். போதை இறங்கி நிஜம் கண்ணுக்கு தெரியும் போது அது மிகுந்த வலியை தருகின்றது. இதனால் அவர்கள் மேலும் போதை ஏற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் அந்த போதை உலகில் இருந்து வெளியே வர நினைத்தாலும் முடிவதில்லை. இதே போலத்தான் சமூக வலை தளங்களில் சஞ்சரிக்கும் நாமும் நிஜ உலகை விட்டு வேறு உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறோம். அந்த உலகம் நமது மனதை கொஞ்சம் கொஞ்சமாக சிதைப்பதை நாம் உணர்வதில்லை. அண்மையில் வெளியான விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகள் இதனை தெளிவாக தெரிவிக்கின்றன.

நமக்கு தேவையில்லாத, சம்பந்தம் இல்லாத பல லட்சம் செய்திகளை ஒவ்வொரு மணித்துளியும் உள்வாங்கி மூளையிலே போட்டுக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் அவற்றிக்கு நமது கருத்தையும் தெரிவிக்கிறோம். மறுப்பு கருத்து தெரிவிப்பவர்களோடு பலமாக மோதுகிறோம். ஏதாவது கருத்து சொல்லிவிட்டு அதை சரி என்று நிரூபிப்பதற்கு பகீரத ப்ரபிரயத்தனம் செய்ய வேண்டி இருக்கிறது. இதில் வசை பாடுதல் அதிகம். இந்த செய்திகள் மற்றும் கருத்துகள் நமது மனங்களை நாள் முழுக்க சுற்றி சுற்றி வருவதனால் நமது மூளை ஆக்கபூர்வமான வேலைகளை செய்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றது.

ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். இந்த குப்பைகள் நமது மூளைக்கு தேவையா ? நம்மிடையே உள்ள கவிஞர்கள் எங்கே? கதாசிரியர்கள் எங்கே ? இசை வல்லுநர்கள் எங்கே ? புதிய இலக்கியம் படைக்கும் படைப்பாளிகள் எங்கே? அனைவரும் குப்பைக்குள் முடங்கி கிடக்கிறார்கள். இணையம் மிகவும் சக்தி வாய்ந்தது. சமூக வலைத்தளங்கள் மிக ஆக்கபூர்வமானவை. ஆனால் அவற்றை அளவாக, சரியாக பயன் படுத்தினால் நிச்சயமாக நம் வாழ்க்கை சிறக்கும். ஆனால் அதில் உள்ள குப்பைகளை வாரிக் கொட்டிக்கொண்டிருந்தால் மூளை குப்பை மேடாக மாறி நாற்றம் எடுக்க தொடங்கிவிடும்.

**குப்பை மேடாகமல், மூளையை ஒரு நந்த வனமாக மாற்றுவது நமது கைகளில்தான் உள்ளது.**

**Dr. V**

# NAVA WILSON LLP

BARRISTERS AND SOLICITORS



## WE OFFER SERVICES IN:

Real Estate

Corporate Law

Litigation


10 Milner Business Court, Suite 210 Toronto, ON M1B 3C6

416.321.1100

416.321.1107

info@navawilson.law

www.navawilson.law


Merry Christmas & A Happy New Year
THE LAW OFFICES OF
MELENI DAVID
BARRISTERS AND SOLICITORS
LAW OFFICE OF MELENI DAVID
WISHING
EVERYONE
THE VERY BEST
DURING THIS HOLIDAY SEASON!
MELENI DAVID
PERSONAL INJURY LAWYERS
CALL US WITH
CONFIDENCE
416.271.5992



**Standing** (Left to Right)

Mr.Kamalanathan Kathiravelpillai, Mr.Vijendran Somasundaram, Mr.Balakumaran Thiraviam, Mr.Vinayagamoorthy Saravanamutthu,Mr.Matheeswaran Tharmalingam, Mr.Arun Kulasingam, Mr. Jeyabalan Nadarajah, Mr. Mohanathas Natkunam

**Sitting** (Left to Right)

Mrs.Pushpalatha Mathanalingam, Mr.Kularajendram Kandiah, Mr. Murugesu Sithamparapillai, Mr.Varnacumaaran Kanapathippillai, Mr.Gnanendran Narasingam, Mrs.Saroja Sathiyaseelan

**Absenties**

Mr.Thiraviam Nagaratnam, Mr. Vin Mahalingam, Mr. Sothinathan Veeravaku, Mr.Kantharupan Karthikes

# DRUM LESSONS

RA Rhythms

**RHYTHM, THEORY & TECHNIQUES**

*Learn Music The Fun Way.*

- Develop a Solid Musical Foundation
- Work Through your Favourite Songs
- Preparation for Stage Performances

**Experience A Fun & Effective Learning System**

**மேடை நிகழ்ச்சிக்கான முறையான பயிற்சிகள் வழங்கப்படும்**

647-299-7404 www.rarhythms.com / info@rarhythms.com

# புதிய Drums வகுப்புகள் ஆரம்பம்

*Learn Music The Fun Way!*

- சிறியோர் முதல் பெரியோர் வரை மிக இலகுவான முறையில் Drums பயிற்றுவிக்கப்படும்.
- மேடை நிகழ்ச்சிகளுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.
- Gain Excellent Understanding of Rhythm, Theory & Techniques



**Special Training for Stage Performance**

647-299-7404 www.rarhythms.com / info@rarhythms.com

# நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
# Nelliady Central College Old Students Association - Canada

## 2017 அங்கத்தவர் பட்டியல்

## ஆயுட்கால அங்கத்தவர்கள்

1. திரு. குமாரசாமி சிவஞானம் 416-754-2494
2. திரு. நாகலிங்கம் சிவயோகன் 416-999-5432
3. திருமதி நளினி சிவயோகன் 647-271-6410
4. திரு. இராசதுரை தேவராசா 647-271-6410
5. திரு. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம் 416-297-6508
6. திருமதி. விஜயகுமாரி செல்வரத்தினம் 416-297-6508
7. திரு. செல்வலிங்கம் செந்தில்குமரன் 416-278-5540
8. திரு. வி. விஜேந்திரதாஸ் 416-726-1647
9. திரு. நரசிங்கம் ஞானேந்திரன் 416-937-8090
10. திரு. மணி வேலுப்பிள்ளை 416-284-5250
11. திரு. ஆழ்வார் சீவரத்தினம் 905-554-5725
12. திருமதி. சிவனேஸ்வரி தேவகுமார் 905-239-8606
13. திரு. சரவணமுத்து விநாயகமூர்த்தி 416-508-0370
14. திரு. சுப்பிரமணியம் ரவீந்திரன் 416-756-9901
15. திரு. கந்தசாமி அருளம்பலம் 416-261-1666
16. திரு. நற்குணம் மோகனதாஸ் 416-651-4924
17. திரு. சின்னத்துரை கிருஸ்ணகுமார் 905-209-9670
18. திருமதி. அருணா கிருஸ்ணகுமார் 905-209-9670
19. திரு. மாணிக்கம் மனோகரன் 905-649-1900
20. திரு. பொன்னம்பலம் பாலராஜன் 905-420-9996
21. திருமதி. சிவாஜினி பாலராஜன் 905-420-9996
22. திரு. குணரத்தினம் 416-754-8296
23. திரு. சீவரத்தினம் ஜெயானந்தகுமார் 905-5546474
24. திரு. கணபதிப்பிள்ளை வர்ணகுமாரன் 416-844-7390
25. திரு. சோமசுந்தரம் விஜேந்திரன் 905-472-6450
26. திருமதி. பவானி விஜேந்திரன் 905-472-6450
27. திருமதி. கஜேந்தினி ஜெயராஜன் 416-754-4144
28. திரு. ஆறுமுகம் ராஜ் ராஜரத்தினம் 905-471-4440
29. திருமதி. ஜெயந்தி பரராஜசிங்கம் 416-321-9445
30. திரு. சுப்பையா சத்தியசோதி 905-201-9637
31. திருமதி. குமுதினி சத்தியசோதி 905-201-9637
32. திரு. ஏரம்பமூர்த்தி விக்னேஸ்வரராஜா 416-896-1323
33. திரு. சூடாமணி சந்திரகுமார் 416-893-8747
34. திருமதி. சுமதி சாந்தகுமார் 905-273-7946
35. திரு. மார்க்கண்டு பத்மநாதன் 905-294-8365
36. திரு. கதிரவேற்பிள்ளை வரதராஜா 416-302-2862
37. திரு. சண்முகராஜா தயாபரன் 416-321-6969
38. திரு. சுப்பிரமணியம் இராஜகணபதி 416-829-0970
39. திரு. இராஜரத்தினம் தேவன் 416-438-1583
40. திரு. நடராஜா ஜெயபாலன் 416-750-2358
41. திரு. மன்மதன் நமசிவாயம் 416-438-3517
42. திரு முருகேசு பாலகணேசன் 905-471-6921
43. திரு. குமரையா இராமதாஸ் 416-616-4519
44. திரு. நாகரத்தினம் திரவியம் 416-332-8738
45. *திரு.கதிர்காமநாதன் - சிவாஸ்கரன் 416-283-2487*
46. திரு. திருநாவுக்கரசு கணபதிப்பிள்ளை 416-505-2461
47. திரு. சபா குலோத்துங்கன் (U.S.A) 410-560-6771
48. திரு. திரவியம் பாலகுமாரன் 416-332-8738
49. திரு. வேலாயுதம் சுதாகர் 416-471-8971
50. திரு. காந்தரூபன் கார்த்திகேசு 416-291-3997
51. திருமதி. சுமதி காந்தரூபன் 416-291-3997
52. திரு. செல்வராஜா பிரபுராஜ் 647-721-0743
53. திரு. புவனேந்திரன் இராஜ்மோகன் 647-309-7790
54. திரு. பாலசுப்பிரமணியம் ஆனந்தராசா 416-287-5414
55. திரு. குமாரசாமி சிவயோகம் 905-607-2863
56. திரு. நடராஜா இராஜேஸ்வரன் 416-666-1120
57. திருமதி. பபிதா சிவராஜா 905-201-6857
58. திருமதி. தயாளினி விஜயதுங்கம் 905-201-8614
59. திருமதி. இராஜேஸ்வரி சச்சிதானந்தம் 416-321-3616
60. திரு. பொன்னம்பலம் மதிரூபன் 416-725-8242
61. திரு. தர்மலிங்கம் மதீஸ்வரன் 905-497-6693
62. திரு. சண்முகநாதன் கௌரிகாந்தன் 905-294-7429
63. திரு. சுப்பிரமணியம் கெங்காதரன் 416-388-0920
64. திரு. சிதம்பரபிள்ளை முருகேசு 416-284-7900
65. திருமதி. மோகனாம்பிகை சிறீகாந்தன் 416-267-6741
66. திரு. கதிரேசு புஸ்பானந்தன் 514-624-9369
67. திரு. இராஜதுரை ஸ்ரீஸ்கந்தராசா 905-209-8384
68. திரு. செல்வராஜா மகாதேவன் 416-835-2604
69. திரு. செல்வராஜா ஞானச்செல்வன் 905-251-8074
70. திருமதி. தங்கம்மா செல்வராசா 416-209-8384
71. திரு. கதிரவேலு இராஜதுரை 416-754-3850
72. திரு. சுரேன் நாதன் 416-723-2204
73. திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் 416-287-6171
74. திரு. சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் 416-455-3956
75. *திரு. வீரவாகு - சோதிநாதன் 416-402-9393*
76. திரு. கந்தையா குலராஜேந்திரம் 416-724-0465
77. திரு. சிற்றம்பலம் அம்பிகாவரன் 647-349-3525
78. திருமதி. சுவர்ணா குலசிங்கம் 416-332-8738
79. திருமதி. கவிதா ஜெயக்குமார் 416-284-4192
80. திரு.கமலக்கண்ணன் அனங்கன் 647-476-4066
81. திரு. கிருஸ்ணா தவரூபன் 905-846-2066
82. திரு. வீரகத்தி கனகசபை 416-297-7542
83. திரு. தம்பிப்பிள்ளை செல்வராஜா 905-472-1908
84. திரு. செல்வராஜா இளங்கோ 416-286-0895
85. திருமதி. இராஜேஸ்வரி தர்மராஜா 416-298-8731
86. திரு. வினாசித்தம்பி மகாலிங்கம் 416-609-0274
87. திரு. இராசேந்திரம் உதயகுமார் 905-230-1854
88. திரு. சிவசோதி பிரேம்நாத் 416-275-6511
89. திருமதி. சறோஜா சத்தியசீலன் 905-201-8375
90. திரு. இராசையா பாலசுப்பிரமணியம் 905-944-9345
91. திரு. நாகலிங்கம் சிவதீசன் 416-208-7404
92. திருமதி. வாணி சிவதீசன் 416-208-7404
93. திரு. கதிரவேல் சுழபநச 416-297-9957
94. திரு. தங்கராஜா சங்கர் 416-807-8334
95. திரு.தங்கராஜா சங்கர் 416-808-8334
96. திரு.சீவரத்தினம் இராசன் 416-754-3206
97. திரு.கிருஸ்ணகுமார் கந்தப்பு 416-558-1376
98. திரு.சிவா சிவசங்கரம் 416-736-3541
99. பானுமதி போல் 905-947-9015
100. திரு.செல்லையா திருச்செல்வம் 647-924-4427
101. *திருமதி. சிவாஜினி முரளி 647 986 7965*
102. *திருமதி. ஜெயந்தி சிவனேஸ்வரன் 647 351 0122*
103. *திரு. குலசிங்கம் அருண் 647 535 8273*

We Provide to You

*Free Home Staging*
*By Professional Certified Home Stager*
*Professional Photo & Virtual Tour*
*Just Listed $ Sold Flyer Distribution in your areas*
*Arrange the Cleaning & Renovation for Lower cost*
*FreeHome Market Evaluation*
*Email/ E Flyers & Weekly Advertising*
*Social Media Marketing*
*On the Street Sales direction signs*
*Open House for Client needs*
*Paper media Advertisement*

# SELL / BUY
## YOUR HOME
WITH RELIABLE & FRIENDLY

LISTING STARTING WITH 1%



VARNA KANAPATHIPILLAI

PROPERTY MAX Realty Inc. Brokerage
WHERE PROPERTIES SOLD AT IT'S BEST!

அழையுங்கள்
**416 844 7390**

2761 Markham Road, Unit # D33
Scarborough, ON M1X 0A4

LOT OF YEARS' EXPERIENCE
*and* **Full time Realtor**
*some conditions may applied**





B.V.F
BRIGHT VISION FINANCIAL CORP.

## SOLUTION FOR INSURANCE:
- specialized In Life, Critical, Disability(Income Protection), Travel, Health, And Super Visa Emergency Medical Insurance.
- We deal with more than 25 Insurance Companies.
- We will get you, lower monthly premium Medical, And Non-Medical Insurance.

## TAX AND ACCOUNTING SERVICES:
- Tax: Great Discounts for Family, Lower rate for Individual,T4, T4A & Summary, Free Consultation for Corporation, And Lower Price for Corporate Tax.
- Accounting: Business Accounting, Book keeping, And Payroll

## HIRING:
- Insurance Advisors
- RESP Sales Associates
- Telemarketers

Both Studies course fee 100% Free
and Some Condition may applied*

2761 Markham Road, Unit # D33
scarborough, ON M1X 0A4
www.brightvisionfn.com

அழையுங்கள் 416-623-4937



வலயமட்டத்தில் இடம்பெற்ற 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி 1 ஆம் இடத்தை வெற்றிகொண்டு மாகான மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.
Nelliady Central College Under 20 girls won the 1st place on Kabadi game.



வலயமட்ட போட்டியில் 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி 2 ஆம் இடத்தை வெற்றிகொண்டு மாகான மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.
Nelliady Central College Under 17 girls won the 2nd place on Kabadi game



15.02.2017 அன்று இடம்பெற்ற வலய மட்ட கால்பந்தாட்ட போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி 2ம் இடம்பெற்றது.



வலயமட்டத்தில் இடம்பெற்ற 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி 1 ஆம் இடத்தை வெற்றிகொண்டு மாகான மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.
Nelliady Central College Under 20 girls won the 1st place on Kabadi game.



வடமராட்சி வலய மட்டத்தில் அண்மையில்
இடம்பெற்ற எல்லே போட்டியில் நெல்லியடி மத்தியகல்லூரி 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் முதல் இடமும் 20 வயதிற்குட்பட்ட பெண்கள் 3ஆம் இடம் பெற்றனர். இதேவேளை
# Cricket போட்டியில் J/NCC ஆண்கள் மற்றும் பெண்கள் முதல் இடம்பெற்றனர்.




மாகாண மட்டத்தில் கபடியில் எமது கல்லூரி அணியினர் வெற்றிச்சாதனைகள் புரிந்துள்ளனர்
சாதனைகள் புரிந்து மாணவர்களுக்கும் அவர்களை வழி நடத்திய ஆசிரியப்பெருந்தகைகளுக்கும் வாழ்த்துக்கள்





வடமராட்சி வலய மட்டத்தில் இடம்பெற்ற எறிபந்துப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியின் அனைத்து அணிகளும் முதலிடத்தைப் பெற்று கிண்ணத்தை சுவிகரித்தது.
20 வயது ஆண் எறிபந்து 1 ம் இடம், 20 வயது பெண் எறிபந்து 1 ம் இடம், 17 வயது ஆண் எறிபந்து 1 ம் இடம், 17 வயது பெண் எறிபந்து 1 ம் இடம்

# Expert mortgage advice

**Suban Sinnadurai**
Mobile Mortgage Advisor
226 929-4350
suban.sinnadurai@cibc.com

Banking that fits your life.

CIBC

CIBC Cube Design & "Banking that fits your life." are trademarks of CIBC.

GLORIOUSPRINTERS


*Our goal is to help our clients to save more, and get more result.*


printglorious@gmail.com
info@gloriousprinters.com
www.gloriousprinters.com
Glorious.Printers1

- Business Cards
- Flyers
- Post Cards
- Banners
- Signs
- Window Lettering
- NCR Form Invoices
- Brochures
- Menus
- Posters
- T-Shirt Printing
- Mug Printing
- Ink & Cartridge
- Photo Framing
- Video
- Photography
- Ad Making

9889 Markham Road, Unit-2,
Markham, ON., L6E 0B7.

905.471.2500


Delivering a smooth credit card and debit card payment processing experience to business owners.
MAKING
PAYMENT PROCESSING
Easy
PAYMENT PROCESSING
P.O.S SYSTEM
ATM
DIGITAL SIGNAGE
CCTV
DEBITTECH POINT OF SALE
ATM
STOP STARING AT ME LIKE I'M SOME PIECE OF MEAT.
24/7 SUPPORT W/ FREE 4 HOUR ON-SITE TECH
DEBITTECH POINT OF SALE
850 Tapscott rd, Unit 49,
Scarborough, Ontario. M1X1N4
VISA % M/C as low as 1.39%
www.debittechpos.net
Contact US: info@debittechpos.com
416 640 5479


INSURANCE IS A SUBJECT MATTER OF SMART CHOICE
Incomparable Rates
No Medical Check Up
Seniors Discount
Mega Financial Group
Raj Nadarajah
416-666-1120
PH28 - 4168 Finch Ave. E.
Scarborough ON M1S 5H6
Office: 416-293-5559 • Fax: 416-293-9409



# Shan Thayaparan

**Sales Representative**

TEAM SHAN

DIR: 416-567-7675 BUS: 416-287-2222

Email: info@shan123.com

RE/MAX COMMUNITY

Realty Inc., Brokerage

Each office independently Owned and operated. Not intended to Solicit Buyers or Sellers under contract



# T.K. Thevarajah, EPC

**Insurance & Financial Advisor**
**Working with all communities with over 25 years experience.**

EXPERIENCE
25 YEARS
EXPERIENCE

*I will shop around and select the best company with competitive price.*

Canada Life™ · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · RBC Insurance · Manulife · Sun Life Financial · BMO Insurance

- Life Insurance Critical
- Illness Ins. Mortgage Ins.
- Disability Insurance
- Travel Insurance
- Long Term Care Ins.
- Non Medical Life Ins.

**Office Address :**
625 Cochrane Dr., Suite 610
Markham ON L3R 9R9
e-mail: rajahkana@hotmail.com

**Office Address :**
905-479-0888, Ext.5248
Mob: 416-018-5907
Fax: 905-479-2144

Sutton®

Courtier Immobilier Agréé
groupe sutton-performer inc.

உங்கள் கனவு
ஒரு அழகிய இல்லம் ....
அதை வாங்கித்தருவதே
எனது கடமை



Pushpanatham Kathiresu
(Pushpan)
Agent Immobilier affilié

மொன்றியலில் அனைவருக்கும்
அறிமுகமான முகவர்



அழையுங்கள் புஸ்ப்பன்

**514-952-7047**

123 Place Frontenac, Pointe-Claire, QC, H9R 4Z7

Bus: 514-526-9595
Pkathiresu@sutton.com

Fax: 514-426-9596
www.suttonquebec.com

# FRIENDLY
## TRUCK DRIVING SCHOOL

"Driving Towards Success"




**Courses Available**

- Class A, B, C & D
- Air Brake ("Z"Endorsement)
- Defensive Driving Course (DDC/PDIC)
- Transportation of Dangerous Goods (TDG)
- Border Crossing
- Hours of Service (Log Books)
- Map Reading &Trip Planning
- Classes are given seven days a week
- Lessons are given by highly qualified and experienced instructors
- Flexible Schedule (5am – 10pm)

*850 Tapscott Road, Unit #9,*
*Scarborough, ON M1X 1N4*

**Tel: 416-291-9075**

*www.friendlydrive.com*

Member Of

TTSAO

Ontario Safety League

Ontario Trucking Association

CFIB CANADIAN FEDERATION OF INDEPENDENT BUSINESS.



# LAW OFFICE OF RANJANI THIRUKESWARAN

*Barrister, Solicitor & Notary Public*
*(Attorney-at-Law, Sri Lanka)*

- **Real Estate - Residential, Commercial, Mortgage, Refinancing**
- **Immigration Law - Refugee Claims, Sponsorship**
- **Business Law - Purchase, Sale, Incorporation**
- **Family Law - Divorce, Separation**
- **Last Wills, Power of Attorney, Affidavits, Statutory Declaration**
- **Notarizing and Commissioning**



**3850 Finch Avenue East, Suite 202, Scarborough, Ontario, M1T 3T6**
**(Kennedy & Finch)**
**Tel: 416 291 2242 | Fax: 416 291 2243**
**Email:ranjanithirulaw@bellnet.ca**

*Chapel Ridge*
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
### OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



Christeen Seevaratnam
416-258-6759

Vilosanan Sivatharman
416-993-0826





*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம்; மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



### FINANCIAL BENEFITS

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

### EMOTIONAL BENEFITS

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*